## 15 MARKS EMPTY ANSWER SHEET

Q. NO. கூட்டுறவுக் கூட்டாட்சி என்றால் என்ன? கூட்டுறவுக் கூட்டாட்சியை ஊக்குவிக்கும் அமைப்புகள் சிலவற்றை எழுதுக. மாநிலங்களுக்கிடையேயான குழுக்கள் பற்றி விவரித்து எழுதுக.

விடை / ANSWER

கூட்டுறவுக் கூட்டாட்சி:

1. அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசமைப்பு நிபுணரான கிரான்வில் ஆஸ்டின் இந்திய கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என வர்ணித்தார்.
2. மத்திய மாநில அரசாங்கங்கள் இடையே பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கும் நோக்கத்தில் இந்திய கூட்டாட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு கூட்டாட்சியை ஊக்குவிக்கும் அமைப்புகள்:

1. மாநிலங்களுக்கிடையேயான குழு.
2. மண்டலக் குழுக்கள்.
3. நிதி ஆயோக் (NITI AAYOG)

கூட்டுறவுக் கூட்டாட்சி.




* மாநிலங்களுக்கிடையேயான குழு.
* மண்டல குழுக்கள்.
* நிதி ஆயோக்.
* மாநிலங்களுக்கிடையேயான நதி நீர் பிரச்சனை.

மாநிலங்களுக்கிடையேயான குழுக்கள்:

A. இராஜமன்னார் குழு:

1. இராஜமன்னார் குழு தமிழக அரசால் நிறுவப்பட்டது.
2. இந்த குழு ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதிபதி. பி.வி. ராஜமன்னார் தலைமையில் அமைக்கப்பட்டது.
3. இது 3 பேர் கொண்ட குழு.

4. இது மாநில அரசுக்கு சுயாட்சியை கோரியது.

ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள்:

1. பிரிவு 263, அதாவது, மாநிலங்களுக்கிடையேயான குழுவை உடனடியாக உருவாக்கவேண்டும்.
2. நமது அரசியலமைப்பில் இருந்து 256, 257, 339(2) பிரிவுகளை நீக்குமாறு குழு பரிந்துரைத்தது.
3. மூன்று பட்டியல்களில் இல்லாத இதர அதிகாரங்கள் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு மாற்றப்பட வேண்டும்.
4. அனைத்து இந்தியப் பணிகளை அரசமைப்பிலிருந்து நீக்குவதற்கு இராஜமன்னார் குழு பரிந்துரைத்தது.
5. பிரிவு 356 அதாவது ஜனாதிபதி ஆட்சியை கடைசி ஆயுதமாக மத்திய அரசு பயன்படுத்த வேண்டும்.
6. நிதி ஆணையத்தை நிரந்தர அமைப்பாக மாற்ற வேண்டும்.
7. மத்திய பட்டியல், பொது பட்டியல் ஆகியவற்றிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு அதிக அதிகாரங்களை மாற்ற வேண்டும்.

ஆ. சர்க்காரியா குழு:

1. சர்க்காரியா குழு 1983 இல் மத்திய அரசால் அமைக்கப்பட்டது.
2. இது நீதிபதி ஆர்.எஸ். சர்க்காரியாவின் தலைமையில் உருவாக்கப்பட்டது.
3. இந்த குழு 3 உறுப்பினர்களை கொண்டுள்ளது.
4. இது 247 பரிந்துரைகளை சமர்பித்தது.

சர்க்காரியா குழு பரிந்துரைகள்:

1. மாநிலங்களுக்கிடையேயான குழு உருவாக்கப்பட வேண்டும் மற்றும் மாநிலங்களின் பொதுவான நலன் கருதி மாநிலங்களுக்கு இடையேயான குழு பரிந்துரைகளை வழங்க வேண்டும்.
2. பிரிவு 356 அதாவது ஜனாதிபதி ஆட்சியை கடைசி ஆயுதமாக மத்திய அரசு பயன்படுத்த வேண்டும்
3. இந்தியாவின் முன்னேற்றத்திற்கு பாடுபட்ட பெருமைமிக்க இந்திய குடிமகன்களை ஆளுநர்களாக நியமிக்க வேண்டும்.

4. மும்மொழி கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தது.

5. அரசியல் தலைவர்களை ஆளுநர்களாக நியமிக்க கூடாது என்று பரிந்துரைத்தது.

இ. புன்ச்சி குழு:

1. 2007 இல் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது.

2. இது நான்கு பேர் கொண்ட குழு.

பரிந்துரைகள்:

1. மாநில ஆளுநர்கள் குறிப்பிட்ட பதவிக்காலத்திற்கு நியமிக்கப்பட வேண்டும்.

2. ஒரு மாநிலத்தில் கிளர்ச்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அல்லது பகுதிகளில் மட்டுமே நேரடியாகத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தலாம்.